# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை– 600 106
தொலைபேசி எண்: 2363 5011
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் – www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண். 52 /2021 நாள். 20.10.2021

**ஊரக உள்ளாட்சி தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டு 20.10.2021 அன்று பதவி பிரமாணம் எடுத்துக்கொள்ளாதவர்கள் 22.10.2021 அன்று மறைமுகத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் பதவிபிரமாணம் எடுத்துக்கொண்டு மறைமுகத் தேர்தலில் பங்கேற்கலாம் – தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அறிவிப்பு**

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 9 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல்கள் மற்றும் 28 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தற்செயல் தேர்தல்களில் மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், கிராம ஊராட்சி தலைவர் மற்றும் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் ஆகிய பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 20.10.2021 அன்று பதவிப்பிரமாணம் எடுத்துக்கொள்ளா நிலையில் அவர்கள், 22.10.2021 அன்று மறைமுகத் தேர்தல் நடவடிக்கைக்கு முன்பாக பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டு மாவட்ட ஊராட்சி தலைவர் மற்றும் துணைத் தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் மற்றும் கிராம ஊராட்சி துணைத் தலைவர் தேர்தலில் பங்குபெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அவ்வாறும் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொள்ளாதவர்கள், 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 40 (2)–ல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, அவரது பதவிக்காலம் துவங்குகிற நாளான 20.10.2021–ல் இருந்து மூன்று மாதங்களுக்குள்ளாகவோ அல்லது 20.10.2021–க்குப் பின்னர் நடைபெறும் முதல் மூன்று கூட்டங்களில் ஒன்றிலோ இதில் எது முந்தையதோ அதற்குள்ளாக பதவிப்பிரமாணம் எடுத்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

20/10/2021
மக்கள் தொடர்பு அலுவலர்